# ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை
# கொழும்பு மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆம் திகதியும் முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2010 யூலை 02 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்காய்வு அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்குகளில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம், செலவினம், சொத்துக்கள், மற்றும் பொறுப்புக்கள் எனும் நிலைகளின் கீழும் பெறுமதிகளின் கீழும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| | | கணக்குகள் மீதான தாக்கம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வருமானம் | | செலவினம் | | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
| | | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | | ரூபா'000 | | ரூபா'000 | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (அ) | கணக்குகளில் அதிகரித்துக் காட்டுதல் | - | - | 01 | 58,298 | 01 | 891 | - | - |
| (ஆ) | கணக்குகளில் குறைத்துக் காட்டுதல் | 02 | 3,348 | - | 2,999 | 01 | 5,352 | - | - |
| (இ) | கணக்குகளிலிருந்து விடுபட்டவை | 02 | 23,642 | 01 | - | 01 | 143 | 01 | 13,877 |
| (ஈ) | ஏனையவை | - | - | 01 | 21 | - | | - | - |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

14 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 267,806,162 ஆக இருந்ததுடன், உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 310,404,361 ஆக இருந்தது.

### 1.3.3 தீர்க்கப்படாத கணக்குகள்

ரூபா 2,151,594 கூட்டுப்பெறுமதியான 06 கணக்கு மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகத் தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்பட்டு இருந்ததுடன், முன்னைய ஆண்டுகளில் எனது அறிக்கைகளில் இது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலும், அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

(அ) பதிவளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 யூன் 30 ஆந் திகதி வரையில் 14 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 162,660,855 ஆக இருந்தது.

(ஆ) கணக்காய்விற்குத் தகவல்கள் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 91,134,525 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| (i) நி.பி 110 | இழப்பு மற்றும் நட்டப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 134(2) மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை. | ஒவ்வொரு வருடமும் சனவரி 31 ஆந் திகதியில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | நி.பி 570, 571 மற்றும் 572 | ரூபா 5,973,244 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | நி.பி 702(3) | சபையினால் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தங்களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5 (4) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | மாநகர சபைக்கான கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,657,244 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 260,975,938 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடுகள்

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வங்கி நடைமுறைக் கணக்கின் காசேட்டின் பிரகாரம் ரூபா 6,910,767 தொகையான மீதி காணப்பட்ட போதும் அத் தொகையில் மேலதிக நிதி அளவை முதலீடுகளிலேனும் ஈடுபடுத்துவதற்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) வழங்கப்பட்டிருந்தும் 06 மாதங்களை விஞ்சி கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 1,614,956 தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 110,861 பெறுமதியான 14 மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 189 மற்றும் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ளவா றான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 146,250 | 153,972 | 114,719 | 117,200 | 151,788 | 106,996 |
| (ii) | வாடகை | 20,885 | 18,860 | 22,506 | 20,296 | 15,640 | 22,713 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,101 | 3,839 | 6,723 | 5,201 | 4,015 | 6,993 |
| (iv) | ஏனைய வருமானம் | 149,180 | 104,880 | - | 138,895 | 262,246 | - |

சமர்ப்பிக்கப்பட்ட தொகைகள் கணக்குகளுடன் இணங்காதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.3.2 ஆதனவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் மீளாய்வாண்டிற்கான சொத்து உரித்தாளிகள் 47,619 ஆக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 95,158,941 ஆக அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) நிலுவை ஆதனவரியை சேகரிப்பதற்காக மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தினுள் 10 ஆதனவரி வட்டாரங்களுக்காக 10 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் சொத்துக்கள் தடைசெய்யும் பிடியாணைக் கட்டளையின் கீழ் ஆண்டின் இறுதியில் ரூபா 82,742,455 தொகையினை அறவீடு செய்வதற்கு பிடியாணைக் கட்டளைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. ரூபா 49,511,479 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் அப்பிடியாணைத் தொகையில் இது 60% ஆக இருந்தது.

(இ) கொடுப்பனவுகளைச் செய்கின்ற போது காசோலைகள் மாற்றப்பட்டதன் பின்னர் கொடுப்பனவுகள் கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தும் 2009 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ஆதனவரித் தொகையில் ரூபா 93,332 பெறுமதியில் மதிப்பிழந்திருந்த காசோலைகளுக்காக ரூபா 9,333 கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சொத்துக்கள் தடைசெய்யும் உத்தியோகத்தர்களினால் தினமும் சேகரிக்கப்படுகின்ற பணம் ஒவ்வொரு திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் காரியாலயத்தில் வைப்பில் இட வேண்டியிருந்ததுடன் சேகரிக்கப்பட்ட பணம் ரூபா 5,000 இனை விஞ்சுமாயின் உடனடியாக அடுத்துவரும் தினத்தில் காசு வைப்பிலிடப்பட வேண்டும். மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்காத வகையில் 4, 7 மற்றும் 10 போன்ற இலக்கங்களிலான வட்டாரங்களில் சொத்துக்களைத் தடைசெய்யும் உத்தியோகத்தர்கள் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட பணத்தினை 8 இற்கும் 35 இற்குமிடையிலான நாட்கள் பிடித்து வைத்திருந்த 13 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.3.3 வியாபார அனுமதிப்பத்திரம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வியாபார அனுமதிப்பத்திரங்கள் விண்ணப்பிக்கப்பட்டிருந்த வியாபார நிலையங்கள் 1043 ஆக இருந்ததுடன் அவ் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு 7-10 மாதங்கள் வரையான காலம் தாமதம் ஏற்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2010 ஒக்தொபர் 29 அந் திகதி வரையில் 79 வியாபார அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. தாமதமடைந்தது தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் 964 வியாபாரங்கள் அளவில் வியாபார அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படாமல் அதிகாரப் பிரதேசத்தினுள் வியாபாரங்களை மேற்கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குகின்ற போது உரிய வியாபாரம் பொது சுகாதார பரிசோதகரின் பரீட்சீப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய எழுத்துமூல ஆவணங்கள் காணப்படவில்லை.

### 2.3.4 கடைவாடகை வருமானம்

2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவை கடைவாடகை ரூபா 18,853,250 தொகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கடைவாடகை ஒப்பந்த நிபந்தனை இல. 1 இன் பிரகாரம் மாதாந்த வாடகை உரிய மாதத்தின் 10 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியிருந்தும் இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) கடைவாடகை ஒப்பந்த நிபந்தனை இல. 2 இன் பிரகாரம் மூன்று மாதங்களுக்கு அதிகமான காலம் கடைவாடகை செலுத்தாதிருக்கின்ற வாடகையாளர்களின் ஒப்பந்தங்களை இரத்துச் செய்து வியாபார உரிமையினையும் செல்லுபடியற்றதாகச் செய்ய வேண்டியிருந்த போதிலும் இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) வெலிக்கடை பிளாசா தரைமாடியின் 12 ஆம் இலக்க கடையானது கொள்வனவு நடைமுறை வழிகாட்டியினைப் பின்பற்றாமல் ஆகக் குறைந்த கேள்விப் பெறுமதியிலும் மற்றும் மாதாந்த வாடகைத் திருத்தங்கள் இன்றியும் பழைய தொகைக்கே கையளிக்கப்பட்டமையால் சபை நிதியத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 243,522 | 233,591 | 9,931 | 274,856 | 233,421 | 41,435 |
| ஏனையவை | 217,159 | 213,739 | 3,420 | 210,662 | 204,017 | 6,645 |
| உப மொத்தம் | 460,681 | 447,330 | 13,351 | 485,518 | 437,438 | 48,080 |
| மூலதனச் செலவினம் | 559,961 | 146,841 | 413,120 | 565,863 | 264,227 | 301,636 |
| மொத்தம் | 1,020,642 | 594,171 | 426,471 | 1,051,381 | 701,665 | 349,716 |

## 2.5 மிகைக் கட்டணம்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 226(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் கீழ் உரிய பொறுப்பான அலுவலர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்கு அமைய 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிட வேண்டியிருந்த மிகைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 25,550,166 ஆகும்.

## 2.6 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர்களின் தரம் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 12 | 10 |
| இரண்டாம்தரத்தினர் | 134 | 93 |
| ஆரம்பதரத்தினர் | 804 | 727 |

## 2.7 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.7.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 220,328,503 ஆக இருந்ததுடன், காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 2.7.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 89,683,574 ஆக இருந்ததுடன் இடம்மாறிச் சென்ற, இளைப்பாறிய, பதவியை விட்டு விலகிய மற்றும் இனங்காணமுடியாத நிலுவைக்கடன் மீதிகள் ரூபா 3,681,160 தொகையை உள்ளடக்கிய நிலுவை மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.7.3 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அசைவற்றுக் காணப்பட்ட காசுமீதிகளின் பெறுமதி ரூபா 183,598 ஆக இருந்தது.

### 2.7.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீகப்பரிசோதனை / மெய்மையாய்வு சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 18,470,644 ஆக இருந்தது.

## 2.8 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

### 2.8.1 நிலுவை வருமானத்தைப் பதிவழித்தல்

ஆதனவரி மற்றும் வாடகை தொடர்பாக அறவிடமுடியாதிருந்ததாகக் கருதப்பட்ட தொகைகள் சபையின் சம்மதத்துடன் கைவிடக்கூடியஇருந்தும் இத்தொகை ரூபா 1,000 இனை விஞ்சுமாயின் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 266(அ) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் ரூபா 1,000 இனை விஞ்சிய நிலுவை வருமானம் அமைச்சரின் அங்கீகாரமின்றி சபையின் சம்மதத்துடன் பதிவழிக்கப்பட்டிருந்தது.

| | ரூபா |
|---|---|
| ஆதனவரி | 4,582,382 |
| ஏனைய வாடகை | 156,065 |
| நிலுவையாக இருந்த நீர்க்கட்டணம் | 35,955 |
| நிலுவையாக இருந்த மின்சாரக் கட்டணம் | 7,689,594 |

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

(அ) சந்ரா த சில்வா விளையாட்டரங்கு நிர்மாணம்

சந்தரா த சில்வா விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தின் பிரகாரம் நிர்மாணக் கம்பனியின் இறுதிப்பட்டியலுக்கு சபை நிதி செலுத்தாமையின் காரணமாக மத்தியஸ்த வழக்கொன்று சபைக்கு எதிராக 2008 யூலை மாதம் தொடுக்கப்பட்டிருந்தது. மத்தியஸ்த வழக்கு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சந்தரா த சில்வா விளையாட்டரங்கு நிர்மாணம் தொடர்பாக ஆலோசனை நிறுவகமாக செயற்பட்ட தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்துடன் சபை ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் 3.7 ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம் ஆலோசனை நிறுவனம் ஏதாவது ஒன்றைச் செய்வதற்கு முன்னர் அதன் பெறுபேறாக சபையினால் மேலதிகச் செலவின மொன்றைச் செய்வதற்கு ஏற்பட்டால் அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட நிதியினுள் மேற்கொள்ளப்பட்ட செலவினமாக இருந்த போதிலும் உடனடியாக சபைக்கு அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்தத்திற்கு முரணாக மதிப்பீட்டு செலவினத்தை விஞ்சியிருந்த ரூபா 8,206,977 தொகையான செலவினம் தொடர்பாக சபையின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் நிர்மாணக் கம்பனியுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த இலக்கம் 10 இன் நிபந்தனையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பெறுபேறுகள் கிடைக்கும் வரையில் திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்படுகின்ற நிலத்தினைச் செம்மைப்படுத்துவதற்கான மேலதிக கொடுப்பன வொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்தற்றிருந்த போதிலும் குப்பை கூழங்களை அகற்றுவதற்கு, துப்பரவு செய்வதற்கு, செப்பனிடுவதற்கு மற்றும் அழகுபடுத்துவதற்கு மதிப்பிடப்பட்ட தொகையை விஞ்சி பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பட்டியல் கொடுப்பனவுகளின் போது ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செலவினத்தை மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிட்டு மிகை தொடர்பாக ஆலோசனை நிறுவகத்தினால் விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) செயலாற்றல் மதிப்பீட்டுக் குழுக்கூட்டங்களிலும் இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் சபை சார்பாக பங்குபற்றிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் இது தொடர்பாக போதியளவான பிரகாரம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. மதிப்பீட்டுக் குழுவின் கூட்டங்களுக்காக மாநகர கணக்காளர் மற்றும் மாநகர பொறியியலாளர் என்போர் 02 கூட்டங்களில் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர்.

(iv) 2007 யூலை 17 ஆந் திகதி சந்ரா த சில்வா விளையாட்டரங்கு நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சபை சார்பாக மாநகர ஆணையாளர் மற்றும் மாநகர பொறியியலாளர் என்போர் பங்குபற்றியிருந்ததுடன் அத்தினத்தில் காணப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மத்தியஸ்த வழக்கின் போது சபையினால் செலுத்துவதற்கு இருந்த தொகையான ரூபா 8,206,977 மற்றும் மத்தியஸ்த வழக்குத் தீர்ப்புக் கிடைத்த திகதியான 2010 திசெம்பர் 10 ஆந் திகதி வரைக்கும் அதற்கான தாமத வட்டியான ரூபா 5,670,280 தொகையுமாக ரூபா 13,877,258 கூட்டுத்தொகையானது நிர்மாணக் கம்பனிக்குச் செலுத்துமாறு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெத்தகான தகனக் கூடத்தைத் திருத்துதல்

---

பெத்தகான தகனக் கூடத்தின் திருத்தங்களுக்காக அரச கொள்வனவு நடைமுறை வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 8.9.2 ஆம் பிரிவின் பிரகாரமும் வேலைகள் தொடர்ாக ஒப்பந்தகாரருடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப்பட்டிராததுடன் 5.4.4 ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக 50% செலுத்தப்பட்டிருந்தது.

## 2.10 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

(அ) தியவன்னா இளைஞர் பூங்கா

---

மாநகர சபையினால் தியவன்னா இளைஞர் பூங்கா மற்றும் படகுத்தளம் என்பவற்றை பராமரிப்பதற்காக 2002 திசெம்பர் 02 ஆந் திகதி தனியார் கம்பனியொன்றுடன் ஒப்பந்தமொன்றுக்கு உடன்பட்டிருந்ததுடன் அவ் ஒப்பந்தம் 2007 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்திருந்தது. ஒப்பந்தக் காலப்பகுதியின் போது ஒப்பந்த நிபந்தனைகளை மீறியமை மற்றும் வாடகைப் பணத்தை அறவீடு செய்தல் என்பன தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒப்பந்த இல. 03 இன் நிபந்தனையின் பிரகாரம் முன்னைய வருடத்தில் கிடைக்கும் இலாபத்தில் 22% இற்குச் சமனான தொகை நகர சபைக்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான தொகையொன்று சபைக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) அந்தந்த வருடங்களின் வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட அறிவித்தல் பலகைக் கட்டணப் பிரகாரம் அறிவித்தல்களுக்கான கட்டணம் சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்த இல. 19 இன் நிபந்தனையின் பிரகாரம் ஒப்பந்த நிபந்தனைகளை முறிக்கும் போது ஒப்பந்தத்தை இரத்துச் செய்யவேண்டியிருந்த போதிலும் ஒப்பந்த கால எல்லையினுள் 21 சந்தர்ப்பங்களில் நிபந்தனைகள் முறிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஒப்பந்த இல. 20 இன் நிபந்தனைக்கு முரணாக வேறு 13 வியாபார நிறுவனங்கள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

(v) ஒப்பந்த இல. 22 இன் நிபந்தனையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செல்லுபடியான பிணைமுறி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் கீழ் இளைஞர் கழகத்திற்கு நுழையும் கட்டணங்களிலிருந்தும் படகுசவாரிக் கட்டணங்களிலிருந்தும் களியாட்டவரி அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்காக வாடகைகள் பற்றுச்சீட்டிடப்பட்டிராததுடன் ரூபா 4,868,040 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அங்கீகாரமின்றி 04 டெக்ரர்களை ஏலத்தில் விற்பனை செய்தல்

சபை அங்கீகாரமின்றி 04 டெக்ரர்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு ரூபா 820,500 தொகையொன்று பெறப்பட்டிருந்ததுடன் உரிய வாடிக்கையாளருக்கு 04 டெக்ரர்களினதும் உரிமையினை வழங்காததன் காரணமாக 04 டெக்ரர்களும் எவ்வித செயற்பாடுகளிலும் ஈடுபடுத்தப்படாமல் 02 வருடங்களுக்கும் அதிகமான காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையினால் அதற்காக ரூபா 3,000,000 தொகை நட்டஈடுகோரி சபை உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இவ் வழக்கு நட்டஈடு செலுத்தப்படாது என்ற உடன்பாட்டின் அடிப்படையில் இணங்கப்பட்டிருந்ததுடன் சபை உத்தியோகத்தர்களின் கவனமின்மையின் காரணமாக வழக்குக் கட்டணமாக ரூபா 126,500 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தபட்டிருந்தது. மேலும் 4 டெக்ரர்களின் உரிமை சபை அங்கீகாரமின்றி கையளிக்கப்பட்டிருந்தது.

## 2.11 செயலாற்றல்

(அ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(i) சபை அதிகாரப் பிரதேசத்தினுள் ஒன்றுசேர்கின்ற சிறு குப்பைகளை ஒன்று சேர்த்தல் மற்றும் காண்களைச் சுத்தம் செய்தல் என்பவற்றுக்காக ரூபா 129,248,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 70,000,000 தொகை குப்பைகளை அகற்றும் 02 தனியார் நிறுவனங்களுக்குச் செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

(ii) அழிப்பதற்கு சேகரிக்கப்படுகின்ற குப்பைகளின் நிறையினைப் பார்க்க வேண்டியிருந்தமை சுற்றாடல் நலனோக்குச் செயற்திட்டத்தினால் செய்யவேண்டியிருந்தமையும் ஒப்பந்த நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒரு தொன் குப்பையை அழிப்பதற்கு ரூபா 795 தொகை செலுத்துவதற்கு ஒரு நிறுவனம் உடன்பட்டிருந்ததுடன் நாளொன்றுக்கு அழிக்கக் கூடிய குப்பையின் அளவு 55 தொன்களாகக் கருதி 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 46,635,480 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அழிக்கப்படுகின்ற குப்பைகளின் அளவுகள் நிறுக்கப்பட்டிருக்கப்பட வில்லை.

(iv) குப்பைகளை அகற்றுதல் தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது கூட்டிச் சுத்தப்படுத்தப்படாத சிறுவீதிகளும் குப்பை அகற்றப்படாத பிரதேசங்களும் அவதானிக்கப்பட்டன.

(v) சபை அதிகாரப் பிரதேசத்தினுள் மேற்பார்வையாளர்களின் கண்காணிப்பிற்கு உள்ளாகாத பிரதேசங்கள் மற்றும் சுத்தப்படுத்தப்படாத காண்களும் அவதானிக்கப்பட்டன.

(vi) கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின் கீழ் கூட்டுப்பசளை பெரல்கள் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கூட்டுப்பசளை பெரல்களின் பெறுவனவு மற்றும் விநியோகங்கள் என்பன உரிய முறையில் பதிவிடப்பட்டிராததுடன் பௌதீக ரீதியாகக் காணப்பட்ட மீதி சரியானதா என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கூட்டுப்பசளை பெரல்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் சபை வளவினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நோய்த் தடுப்பு மற்றும் நோய்களைக் குணப்படுத்தும் சேவைகள்

---

சபையினால் மொரகஸ்முல்ல மற்றும் பண்டாரநாயக்கபுர என்ற இரண்டு சிகிச்சை நிலையங்கள் பராமரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக விநியோகிக்கப்பட்டிருந்த மருந்துகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) மருந்து இருப்புப் புத்தகங்களில் ஆரம்ப மீதிகள், பெறுவனவு, விநியோகித்தல்கள் மற்றும் எஞ்சிய இருப்புக்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மருந்து இருப்புப் புத்தகங்கள் அமையத் தொழிலாளரினால் பராமரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) தலைமைக் காரியாலயத்தின் இருப்பு விநியோகத்தல் பத்திரத்தின் பிரகாரம் ரூபா 52,084 பெறுமதியான மருந்துகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் பண்டாரநாயக்கபுர சிகிச்சை நிலையத்தில் அவைகள் பெறுவனவாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மருந்து இருப்புக்களில் காலங்கடந்த ரூபா 31,280 பெறுமதியான 11 மருந்து வகைகள் காணப்பட்டன.

(iv) மாதத்திற்கு ஒரு தடவை நீரிழிவு மற்றும் குருதி அழுத்த நோயாளிகளுக்காக சிகிச்சைகள் நடைபெறுவதுடன் வருடத்தின் முதல் 9 மாதத்தினுள் 9 சிகிச்சைகள் நடைபெற்றிருந்த போதிலும் இதில் 05 சிகிச்சைகளுக்கு மாத்திரமே வைத்தியர்கள் சமுகமளித்திருந்தனர். ‘‘வைத்தியர்கள் தவிர்க்க முடியாத காரணங்கள் தவிர மற்றைய கசல சந்தர்ப்பங்களிலும் கட்டாயமாக இச் சிகிச்சைகளில் பங்குபற்றுவதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகளின் பிரகாரம் சிகிச்சை வழங்கப்பட்டிருந்ததாகவும்’’ நகர முதல்வரினால் 2011 ஒக்தோபர் 04 ஆந் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வைத்தியர்கள் சமுகமளிக்காத தினங்களில் அமையத் தொழிலாளர்களினால் நோயாளிகளுக்கு மருந்துகள் விநியோகிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(இ) டெங்கு ஒழிப்பு விஷேட திட்டம்

---

மாநகர சபை அதிகாரப்பிரதேசத்தில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கான மேல்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2009 ஒக்தோபர் 29 ஆந் திகதி விஷேட டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக 35 ஊழியர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அவர்கள் டெங்கு ஒழிக்கும் பிரிவிற்கும் காண்களைச் சுத்தப்படுத்தும் பிரிவிற்கும் நியமிக்கப்பட்டிருந்தனர். 2010 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2010 யூன் 30 ஆந் திகதி வரை ஊழியர் சம்பளம் மற்றும் நுளம்பு ஒழிப்பு இரசாயனப் பொருட்கள் என்பவற்றுக்காக ரூபா 4,780,918 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் நாவுல பள்ளி ஒழுங்கை நுகேகொட பூர்வாராம மாவத்தை, உடஹமுல்ல சுஹத மாவத்தை மற்றும் நுகேகொட புகையிரத நிலைய வீதி போன்ற வீதிகளின் காண்முறைமைகள் உரிய பிரகாரம் சுத்திகரிக்கப்படாதிருந்தமையும், வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களிலிருந்து அப்புறப்படும் கழிவுப்பொருட்கள் மற்றும் நீர் என்பவற்றினால் காண்முறைமைகளில் நுளம்புக் குஞ்சுகளுடன் நீரினால் நிறைந்து காணப்பட்டமையும் 2010 செப்தெம்பர் 13 இல் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

## 2.12 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினுள் போதியளவு உள்ளகக்கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்